செ.வெ.எண்:24/2017 நாள்:13.07.2017

**பத்திரிக்கைச் செய்தி**



சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் 47 விவசாயிகள் வெளிமாநில பட்டறிவு பயிற்சிக்காக தெலுங்கானா மாநிலம் ஹைதராபாத், குண்டூர் ஆகிய இடங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்களுக்கு சர்வதேச அரை வறண்ட வெப்பநிலை பயிற்சிகளுக்கான ஆராய்ச்சி நிலையம் (ICRISAT), ஆசியா காய்கறி ஆராய்ச்சி நிலையம், தேசிய பயிர் நல மேலாண்மை நிறுவனம் போன்ற நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சிக்கு செல்லும் விவசாயிகளை சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப.,அவர்கள் வாழ்த்தி பயணத்தை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் திரு.ராஜேந்திரன் உள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.